**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.64/2024 - PW- 7**

| | |
|---|---|
| Name | திரு. குமரன் |
| Husband/Father Name | முனுசாமி |
| Village /Area | மன்னார்சாமி கிராமம் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | தனியார் நிறுவன ஊழயர் |
| Age | 42 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 05.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த ரங்கநாதன் என்னுடைய சித்தப்பா ஆவார். அசா. 1 கங்கா எனது சித்தி ஆவார். கடந்த 14.09.2021 அன்று காலை சுமார் 08.00 மணியளவில் என்னுடைய சித்தப்பா ரங்கநாதன் வெளியில் சென்று கோவிந்தாங்கல் பஸ் டாப் வந்த போது என் சித்தப்பாவுக்கும் அன்பு, கிருஷ்ணன், கிருஷ்ணவேனி ஆகியோர்கள் சேர்ந்து என் சித்தப்பாவிடம் தகராறு செய்து உமேஷ் என்பவர் என் சித்தப்பாவின் தலையின் மீது இருப்பு பைப்பால் அடித்தார்.

அன்பு என்பவர் என் சித்தப்பாவை கொம்பால் தலை மீதும் உடலின் மீதும் அடித்தார். என் சித்தப்பா சுய நினைவு இல்லாமல் அங்கேயே விழுந்துவிட்டார். பிறகு விழுந்த என் சித்தப்பாவை கிருஷ்ணனும், கிருஷ்ணவேணியும் காலால் எட்டி, எட்டி உதைத்தார்கள். காயம் பட்ட என் சித்தப்பாவை சோளிங்கர் அரசு

மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு பரிசோதனை செய்து மருத்துவர் மேல் சிகிச்சைக்கு வாலாஜா அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு காயம் பட்ட என் சித்தப்பாவை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது சம்பந்தமாக பானாவரம் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

என் வீட்டிற்கும் இறந்த போன ரங்கநாதன் வீட்டிற்கும் இடைப்பட்ட தொலைவு 30 கி.மீ இருக்கும். சம்பவ தினத்தின் போது நான் எனது சித்தி வீட்டில் தான் இருந்தேன். நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தை கண்ணால் நேரில் பார்த்தேனா என்றால் ஆமாம் பார்த்தேன்.

என் சித்தப்பா இறந்த பிறகு தான் எனக்கு தகவல் கிடைத்தது என்று போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. என் சித்தப்பாவை எட்டி எட்டி உதைத்தாகவும் என்று போலீஸ் விசாரணையில் கூறியுள்ளதால் சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

போலீஸ் விசாரணையில் நான் தகவல் அறிந்து வாலாஜா மருத்துவமனைக்கு சென்று என் சித்தப்பாவின் பிணத்தை பார்த்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் அன்றைய தினம் என் சித்தி வீட்டில் இருந்ததாக போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் அதை பற்றி கேட்காததால் கூறவில்லை.

நான் சம்பவத்தை நேரில் பார்க்காமல் தற்போது பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இறந்த

ரங்கநாதன் எனது அம்மாவின் உடைய தங்கை கணவர் ஆவார். நான் 13–ம் தேதி இரவும், 14–ம் தேதியும் சித்தி வீட்டில் தான் இருந்தேன். இந்த சம்பவத்திற்கு முந்நாள் 14–ம் தேதி காலை 07.30 மணியளவில் ரங்கநாதனின் தம்பியை ஆஜர் எதிரிகள் நால்வர் தான் அடித்திருந்தார்கள். அதை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் வருவற்கு முன்பாகவே அவர்கள் அடித்துவிட்டார்கள்.

ரங்கநாதனை அடித்த அதே இடத்தில் தான் அவரது தம்பியையும் எதிரிகள் அடித்தார்கள். ரங்கநாதனின் தம்பி பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. ரங்கநாதனின் தம்பி சண்டையில் ரங்கநாதனின் உறவினர்களான அவரது மனைவி, அண்ணி கங்கா, அவரது மகன் சிதம்பரம் ஆகியோர்கள் இருந்தார்கள்.

ஆஜர் எதிரிகளை சம்பவ நடந்த இடத்தில் இருந்த நபர்கள் அடித்ததாக கூறுகின்ற விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதற்கு முன்பு அடித்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் ரங்கநாதனின் தம்பியால் அடிக்க முடியாது, காரணம் அவரது கைகள் இரண்டும் சரியாக இயங்காது.

ரங்கநாதன் அடிப்பட்டது அவரது வீட்டிற்கு அருகிலா அல்லது வேறு இடத்திலா என்றால் பேருந்து நிறுத்தத்தில் தான். இரண்டிற்கும் இடையே 500 மீட்டர் தொலைவு இருக்கும். ரங்கநாதனின் தம்பியையும் அதே இடத்தில் தான் அடித்தார்களா என்றால் ஆமாம். இரண்டு சம்வத்திற்கும் இடைப்பட்ட நேரம் 10 நிமிடம் முதல் 30 நிமிடம் வரை இருக்கும்.

ரங்கநாதன் தம்பி அடிப்பட்ட உடன் மருத்துவமனைக்கு அழைத்து செல்ல நாங்கள் முயற்ச்சி செய்தோமா என்றால் இல்லை இருவரையும் ஒரே நேரத்தில் தான் அழைத்து சென்றோம். காலை

ரங்கநாதன் விட்டில் இல்லை அவர் எங்கோ சென்றுவிட்டு பிறகு தான் நடந்து வந்தார். மேற்படி சம்பவ இடமான பேருந்து நிறுத்தம் சாலை ரோட்டை ஒட்டி உள்ளது. அந்த சாலை எந்தெந்த ஊர்களை இணைக்கிறது என்றால் பாணாவரம், ஆயில், கூடலூர் மற்றும் அரக்கோணம் ஆகிய ஊர்களை இணைக்கும்.

பேருந்து நிறுத்தத்தை ஒட்டி கடைகள் உள்ளதா என்றால் ஆமாம் உள்ளது. ரங்கநானுக்கு திருமணம் ஆகி 30 ஆண்டுகள் ஆகிறது. அவர் வீட்டிற்கு நான் அடிக்கடி சென்று வருவேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அவர்களை பார்த்து பேசியுள்ளேனா என்றால் அன்பு என்பவர் ஏற்கனவே ரங்கநாதனை ஒரு முறை மருத்துவமனையில் சேர்த்துள்ளார்.

ரங்கநாதனுக்கு குடிப்பழக்கம் உண்டு என்று சொன்னால் சரிதான். பேருந்து நிறுத்தத்திலிலுந்து எவ்வளவு தொலைவில் எதிரிகள் வீடு உள்ளது என்றால் 500 மீட்டர் தொலைவில் உள்ளது. எதிரிகள் அனைவரும் ஒரே வீட்டில் வசிக்கிறார்களா தனித்தனியாக வசிக்கிறார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அனால் அவர்கள் அனைவரும் கடையில் ஒன்றாக தான் இருப்பார்கள். அந்த கடை யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது.

பேருந்து நிறுத்தத்தில் உள்ள சாலை கிழக்கு மேற்காக செல்கிறது. பேருந்து நிறுத்தத்தில் இருந்து ரங்கநாதனையும் அவருடைய தம்பியையும் ஒரே ஆட்டோவில் தான் அழைத்து சென்றார்கள். அவர்களுடன் ரங்கநாதனின் மனைவியும் அவருடைய தம்பி மனைவியும் உடன் சென்றார்கள்.

நான் மேற்படி ஊருக்கு சென்றது இல்லை என்றும் ரங்கநாதன் எனது சித்தப்பாவே இல்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் முதல் முறையாக என்னை இன்று தான் பார்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.  நான் போலீசாரால் தயாரிக்கப்பட்ட பொய் சாட்சி என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் யாரும் அடிக்கவில்லை என்றும் நான் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.05 18:13:37 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.